# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 02 புதன்கிழமை 17.12.2025 கதிர் 411









## இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு சீன அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குமாம்

கொழும்பு, டிச. 17

டித்வா சூறாவளியால் எதிர்கொண்டுள்ள சவால்களைத் தோற்கடித்து இலங்கை மக்களின் அன்றாட வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு அதிகபட்ச ஆதரவை வழங்குவதாகவும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் இலங்கை மிக விரைவில் மீண்டெழும் என்றும் சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் உப தலைவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம்செய்துள்ள சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் உப தலைவர் உள்ளிட்ட தூதுக் குழுவினர் இன்று காலை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்த

7

# ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் சஜித் போட்டி!

## உறுதிப்படுத்திய சுஜீவ சேனசிங்க

கொழும்பு, டிச. 17

வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ போட்டியிடுவார் என்பதை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, சஜித் பிரேமதாஸவுக்குத் தனது முழுமையான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நான் இதற்கு முன்னர் இரண்டு தேர்தல்களுக்கு மட்டுமே எனது ஆதரவை வழங்குவதாக உறுதியளித்திருந்தேன்.

ஆனால், கடந்த இரண்டு தேர்தல்களில் சஜித் பிரேமதாஸ சில பின்னடைவுகளை எதிர்கொண்டார்.

எனவே, நீதியான முறையிலும் தற்போதைய எதிர்க்கட்சிக் களத்தை கருத்தில் கொண்டும், அவர் போட்டியிடுவதற்கு தகுதியானவர் என அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.” - என்றார்.



## ஐ. நா. வதிவிடப் பிரதிநிதியை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர்



கொழும்பு, டிச.17

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குக்கு இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ஃபிராஞ்சுக்கும் இடையிலான விசேட சந்திப்பு இன்று கொழும்பிலுள்ள

7



## சுமண ரத்னதேரருக்குப் பிணை!

மட்டக்களப்பு, டிச. 17

தமிழ் மக்களை வெட்டிக் கொல்ல வேண்டும் எனக் கூறிய சம்பவம் தொடர்பாக நீதிமன்ற பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் இன்று சரணடைந்ததை அடுத்து அவரை ஒரு இலட்சம் ரூபா இருவர் கொண்ட ஆள் பிணையில் செல்ல அனுமதித்து உத்தரவிட்டு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார்.

மேற்படி தேரர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி ஊடகங்களுக்கு சுமண ரத்ன தேரர் வழங்கிய செவ்வியின்போது வடக்கில் உள்ள

7



## இரு நாள்கள் கூடவுள்ள நாடாளுமன்றம்!

### சபை அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, டிச. 17

நாளை கூட்டப்பட்டுள்ள நாடாளுமன்றம் நாளைமறுதினமும்கூடவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் இன்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

டிசம்பர் 18ஆம் திகதி வியாழக்கிழமை

7

## கெஹெல்பத்தர பத்மேவின் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மீட்பு!

கொழும்பு, டிசெ.17

பாதாள உலகக்குழு உறுப்பினரான 'கெஹெல்பத்தர பத்மே' என்பவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கிடைத்த தகவல்களின் அடிப்படையில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றும் மற்றும் பெருமளவான தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான 'கெஹெல்பத்தர பத்மே' இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட நிலையில், தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் வர்த்தகக் குற்ற விசாரணைப் பிரிவினர், கெஹெல்பத்தர பத்மேவிடம் மேற்கொண்ட விசாரணையின் போது அவருக்குச் சொந்தமான ஆயுதங்கள் வெளிநாட்டில் உள்ள மற்றுமொரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவரின் பராமரிப்பில் நாட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

எந்தேரமுல்லவிலிருந்து கொழும்பு – கண்டி வீதி வரை உள்ள குறுக்கு வீதியில் அமைந்துள்ள தற்காலிகமாக அமைக்கப்பட்ட அறை ஒன்றைச் சோதனையிட்ட போதே அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் களனி முகாம் அதிகாரிகளின் உதவியுடன், குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இந்தத் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பிஸ்டல் ஒன்றும், ரி–56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு மெகசின்கள் மற்றும் ரி–56 ரக 267 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விவசாய ஓய்வூதியம் பெறுவதற்கான கால அவகாசம் நீடிப்பு!

கொழும்பு, டிசெ.17

'டித்வா' புயல் நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், ஓய்வூதியம் வழங்குவதற்கான கால அவகாசத்தை டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாய ஓய்வூதியதாரர்கள் டிசம்பர் மாதம் முழுவதும் அரச வேலை நாட்களில் தமக்குரிய தபால் நிலையங்கள் அல்லது உப தபால் நிலையங்கள் ஊடாகத் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக விவசாய ஓய்வூதியம் ஒவ்வொரு மாதமும் 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை வழங்கப்படும்.

எனினும், அனர்த்த நிலைமை காரணமாகத் தபால் நிலையங்களுக்குச் செல்லும் வீதிகள் சேதமடைந்துள்ளதால் ஏற்படும் போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்திற் கொண்டு, இம்முறை அந்தக் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது 178,753 விவசாயிகள் விவசாய ஓய்வூதிய நன்மைகளைப் பெறுவதுடன், 6,312 மீனவர்கள் மீனவர் ஓய்வூதியத்தைப் பெறுகின்றனர்.

டிசம்பர் மாத ஓய்வூதியக் கொடுப்பனவிற்காக 413 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை அறிவித் துள்ளது.

(ஐ)

## முச்சக்கரவண்டி காட்டுப்பன்றியுடன் மோதி விபத்து

கொழும்பு, டிசெ.17

அதிக வேகத்தில் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று, காட்டுப்பன்றியுடன் மோதி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில், மல்லிப்பு சந்திக்கு அருகில் நேற்று நள்ளிரவு 12.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேனை பகுதியிலிருந்து கொட்டகலை பகுதியை நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

முச்சக்கரவண்டி அதிக வேகத்தில் பயணித்துள்ளதாகவும், இதன்போது வீதியின் குறுக்கே பாய்ந்த காட்டுப்பன்றியின் மீது மோதியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டிக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்களைப் பொலிஸாரும், வீதியில் பயணித்தவர்களும் இணைந்து மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சஜித் அரசாங்கத்திற்கு முன்வைத்த யோசனை

கொழும்பு, டிசெ.17

அனர்த்த முகாமைத்துவத் துறைக்கெனப் பிரத்தியேகமான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சொன்றை ஸ்தாபித்து, அதனை வலுப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்திற்கு யோசனை முன்வைத்துள்ளார்.

குருநாகல் மாவட்டம், இப்பாகமுவ பகுதியில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (16) கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"நாட்டில் துல்லியமான, திட்டவட்டமான, வினைத்திறனான அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. அவ்வாறு எதுவும் நடைமுறையில் இல்லை. அனர்த்த முகாமைத்துவப் பிரிவும் இன்று சுனாமிக்கு அகப்பட்டுப் போனது போன்ற நிலையிலேயே உள்ளது. அனர்த்த முகாமைத்துவத்திற்குத் தெளிவான நிறுவனக் கட்டமைப்போ, வழிகாட்டுதல் தத்துவங்களோ, செயற்பாடுகளோ அல்லது செயற்றிட்ட வரைபடமோ எதுவும் இல்லை.

நாட்டில் மேசுமு மற்றும் புளூஆட நிறுவனங்களைப் போலவே சூழல் பாதுகாப்பு, கட்டடங்கள், மண்சரிவுகள், வெள்ளம், சூறாவளி போன்றவற்றுடன் தொடர்புடைய நிறுவனங்கள், முறையான திட்டமிடலுடன் ஒருங்கிணைந்த முறையில் செயற்பட வேண்டும். ஒருங்கிணைந்த அனர்த்த முகாமைத்துவத் திட்டம் வகுக்கப்பட்டு தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் மட்டங்களிலும் இதன் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இதனைச் செயற்படுத்தத் தனி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சொன்றை ஸ்தாபிக்க வேண்டும்.



இதன் கீழ், விசேட பயிற்சி பெற்ற கிராமிய மட்ட அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இந்தத் துயரங்களிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு, பலவீனமடைந்துள்ள நாட்டின் இடர் முகாமைத்துவப் பொறிமுறையை வலுப்படுத்த வேண்டும். சுனாமி ஏற்பட்டு 21 ஆண்டுகள் ஆகியும், அடிக்கல் நாட்டப்பட்ட புத்தளம் டொப்ளர் ராடார் கட்டமைப்பு இன்னும் நிறுவப்படவில்லை. இதனை விரைவில் ஸ்தாபித்துத் தருமாறு ஜப்பான் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம். மக்கள் சார்பாக இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

தற்போது தோல்வி கண்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டமே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. பெரும் சேதங்களையும் இழப்புக்களையும் சந்தித்துள்ள மக்கள் நிரந்தரமாக மீள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளுடன் கூடிய நிவாரணப் பொறிமுறை காணப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி குரல் கொடுக்கும்.

இந்தப் பேரழிவால் பில்லியன் கணக்கான டொலர்கள் சேதம் ஏற்பட்டுள்ளது. சேதத்திற்கு ஏற்ற இழப்பீடுகளை வழங்கப் போதிய நிதி அரசிடம் இல்லாமையால், சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை அவசரமாக நடத்த வேண்டும். இந்த விடயத்தைப் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் முன்வைத்துள்ளேன்.

எதிர்க்கட்சி என்ற வகையில், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி இதில் பேதம் காட்டாது பூரண ஆதரவைத் தரும். இச்சமயம், அரசியல் ஆதாயம் தேடாமல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கி, மக்களின் வாழ்க்கையை வலுப்படுத்துவது அவசியமாகும். அவர்களை இயல்பு வாழ்க்கைக்கு மீட்டெடுப்பதே முன்னுரிமையான விடயமாகும். இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அரசியல் பந்தயமாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை அவசரமாகக் கூட்டி வலுவான அனர்த்த முகாமைத்துவப் பொறிமுறையை முன்னெடுக்க வேண்டும்.

இந்தத் தவறுகளையும் குறைபாடுகளையும் சரிசெய்து கொண்டு புதிய பயணத்தை முன்னெடுக்க வேண்டும். அழிவைச் சந்தித்துள்ள நமது நாட்டு மக்களுக்காக இதனைச் செய்தே ஆக வேண்டும். இதற்கான ஆதரவை நாம் தருவோம்" என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஐ)



# 5 இலட்சம் யூரோ பெறுமதியான நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு

கொழும்பு, டிசெ.17

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த ஜேர்மனி மற்றும் லக்சம்பர்க் ஆகிய நாடுகளிலிருந்து 5 இலட்சம் யூரோ (500,000 யூரோ) பெறுமதியான 69,000 கிலோகிராம் எடையுடைய அனர்த்த நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு விசேட சரக்கு விமானம் ஒன்று இன்று (17) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமானத்தில் கூடாரங்கள், சமையல் உபகரணங்கள், மெத்தைகள் மற்றும் நீர் சுத்திகரிப்பு உபகரணங்கள் உள்ளிட்ட பெருமளவான நிவாரணப் பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

குறித்த நிவாரணப் பொருட்களை ஏற்றிய போயிங் - 747 **(Boeing-747)** ரக பாரிய சரக்கு விமானம், இன்று அதிகாலை 04.30 மணியளவில் லீக் நகரிலிருந்து கட்டுநாயக்கவை வந்தடைந்தது.

இந்த நிவாரணப் பொருட்களைப் பொறுப்பேற்பதற்காக இலங்கைக்கான ஜேர்மனிய பிரதித் தூதுவர் சாரா ஹசல்பாத், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி பியர் ட்ரிபொன் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தனர். (ஐ)

# வடக்கு, கிழக்கில் மழை நீடிக்கும்

கிழக்கிலிருந்தான ஒரு அலை வடிவக் காற்றின் தாக்கம் காரணமாக நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தற்போது நிலவும் மழை நிலைமை அடுத்த சில நாட்களுக்கும் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களிலும் பதுளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

# அனர்த்த மீட்புக்கு மேலதிகமாக 500 பில்லியன் தேவை: ஹர்ஷ

கொழும்பு, டிசெ.17

*அனர்த்த நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்காக மேலும் 500 பில்லியன் ரூபா மதிப்பீட்டை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.*

*இதற்குத் தேவையான போதிய பண இருப்புகள் அரசாங்கத்திடம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:*

*"வரும் ஆண்டிற்கான மூலதனச் செலவாக 1,400 பில்லியன் ரூபாவை நாம் ஒதுக்கியுள்ளோம். வீதிகள் மற்றும் வைத்தியசாலைகள் அமைப்பது போன்றவற்றுக்காகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சூறாவளியால் ஏற்பட்ட சேதத்திற்கு நிதியை மீள ஒதுக்குவதற்குப் பணம் உள்ளது. எனவே புதிதாகப் பணம் தேவைப்படும் என்று நான் நம்பவில்லை.*

*ஆனால், வீடுகளைச் சுத்தம் செய்வது போன்ற அன்றாடச் செலவுகள் உள்ளன. அதற்குச் சுமார் 500 பில்லியன் ரூபா அதிகமாகச் செலவாகும். அதைத் தாங்கிக்கொள்ள முடியும். ஆரம்பச் செலவாக 13மூ மட்டுமே செலவிட முடியும் என்ற ஐஆகு நிபந்தனை உள்ளது. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினை காரணமாக, அதற்கும் அதிகமாகச் செலவிட எமக்கு ஒருவித சுதந்திரம் உள்ளது. மற்றொன்று, அரசாங்கத்தின் வங்கிக் கணக்கில் ஒரு ட்ரில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகப் பணம் உள்ளது."*

*'சுநடிரடைனபைெ ளுசடை டுயமெய' நிதியத்தை ஒரு சட்டரீதியான நிதியமாக பாராளுமன்றத்தின் ஊடாக நிறைவேற்ற வேண்டும் என்றும் கலாநிதி ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தினார்.*

*"அந்த நிதியம் ஒரு சட்டரீதியான நிதியமாக இருக்க வேண்டும். மாறாக 'ஹெல்ப்பிங் ஹம்பாந்தோட்டை' போன்ற நிதியங்களை உருவாக்க முடியாது. அவ்வாறு ஒன்றை உருவாக்க பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்து அதனை நிறைவேற்ற வேண்டும். இன்னும் அவ்வாறு செய்யப்படவில்லை. பாராளுமன்றத்தின் ஊடாக இந்த நிதியம் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால் இது சரியான வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.*

*அரசாங்கம் மட்டுமே அனைத்தையும் செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை என்பதே எனது கருத்து. அரசும் தனியார்த் துறையும் இணைந்து இதனைச் செய்ய முடியும். தனியார்த் துறைக்குச் செய்ய இடமளிக்க வேண்டும். அவர்களால் முடியாதவற்றை அரசாங்கம் செய்ய வேண்டும்."என்றும் அவர் தெரிவித்தார்.*

(ஐ)

# மோடியும் அமித்ஷாவும் எத்தனை முறை வந்தாலும் மக்கள் தோற்கடிப்பார்கள்: மு.வீரபாண்டியன் கருத்து



பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் எத்தனை முறை தமிழகம் வந்தாலும், வரும் தேர்தலில் அவர்களை தோற்கடிக்க தமிழக மக்கள் தயாராக உள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்தார். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் 48-வது பிறந்த நாளையொட்டி, திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட திமுக அலுவலகத்தில் ரத்ததான முகாம் நேற்று நடைபெற்றது. அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் முகாமை தொடங்கி வைத்து, ரத்த தானம் செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் பேசுகையில், “நாட்டின் ஜனநாயகத்தை, சட்டத்தை காக்கும் போரில் திமுக கூட்டணி வெற்றி பெறும். திமுக வெற்றிக்கு கூட்டணி பலம் மட்டும் காரணமல்ல, தமிழக மக்களின் கருத்தியல் ரீதியான ஒற்றுமையும் காரணம். திமுக கூட்டணியை எதிர்க்க எத்தனை கட்சிகள் வந்தாலும் பிரதமரும், உள்துறை அமைச்சரும் எத்தனை முறை தமிழகம் வந்தாலும், அவர்களை தோற்கடிக்க தமிழக மக்கள் தயாராக உள்ளனர்” என்றார்.

முன்னதாக பெரம்பலூரில் மு.வீரபாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கேரளாவில் உள்ளாட்சி தேர்தலில் இடதுசாரி கட்சிகள் தோல்வியை சந்தித்துள்ளது. இத்தோல்வியை நாங்கள் ஏற்கிறோம். இம்மாற்றம் ஜனநாயகத்துக்கு தேவையான ஒன்றுதான். அதேசமயம் 42 ஆண்டுகள் திருவனந்தபுரத்தில் பொறுப்பில் இருந்த நாங்கள் தற்போது தோல்வியுற்றதை, பிரதமர் மோடியும் மத்திய அமைச்சர் அமித் ஷாவும் தமிழகத்துடன் ஒப்பிட்டுப் பேசுவது தவறு. தமிழக அரசியல் வேறு, கேரள அரசியல் வேறு. வருகிற சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி பெறுவது உறுதி. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## நிலுவையில் உள்ள அன்புமணி மீதான ஊழல் வழக்குகளை சிபிஐ விசாரிக்க ராமதாஸ் தரப்பு தீர்மானம்!



நிலுவையில் உள்ள அன்புமணி மீதான ஊழல் வழக்குகளை சிபிஐ விசாரிக்க ராமதாஸ் தரப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் இன்று பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் ராமதாஸ் உட்பட 22 பேர் கலந்து கொண்ட நிர்வாக குழு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆலோசனை கூட்டத்தில் பாமக கவுரவ தலைவர் ஜி.கே. மணி, பாமக செயல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் ராமதாசின் மூத்த மகள் ஸ்ரீ காந்தி, அருள் எம்.எல்.ஏ.,பொதுச் செயலாளர் முரளி சங்கர், பொருளாளர் சையத் மன்சூர் அலி, முன்னாள் எம்.பி. துரை, தலைமை நிலைய செயலாளர் அன்பழகன், மாநில நிர்வாகி பரந்தாமன் உள்ளிட்ட 22 நிர்வாகிகள் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அன்புமணி தொடர்ந்து பாமகபெயரையும், டாக்டர் ராமதாஸ் பெயரை பயன்படுத்தி வருவதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவும், கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்தும், வருகிற தேர்தலில் தேசிய கட்சியுடன் கூட்டணி அமைக்கலாமா? அல்லது மாநில கட்சியுடன் கூட்டணி அமைக்கலாமா? அல்லது வேறு ஏதேனும் புதிய கட்சியுடன் கூட்டணி அமைக்கலாமா? என டாக்டர் ராமதாஸ் ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. தொடர்ந்து நடந்த பாமக நிர்வாகக் குழுவில், அன்புமணி மீதான ஊழல் வழக்கை சிபிஐ விரைந்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ‘பொய்யான ஆவணங்களை கொடுத்து தேர்தல் ஆணையத்தை ஏமாற்றியது குறித்து அன்புமணி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். 46 ஆண்டுகளாக 96,000 கிராமங்களுக்கு நடந்து சென்று உருவாக்கிய இந்த கட்சியில் அன்புமணிக்கு உரிமை இல்லை.

அன்புமணிக்கு உரிமை இல்லாத கட்சியின் பெயரில் விருப்ப மனு வாங்குவதாக ராமதாஸ் தரப்பு பாமக தீர்மானம் அளித்துள்ளது. ஒட்டுக்கேட்பு கருவி வைத்து சொந்த அப்பனுக்கு ஆப்பு வைக்கத் துணிந்த அன்புமணி மீது நடவடிக்கை எடுக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தலையணை மந்திரத்தால் தலைக்கு பித்தம் ஏறி அலையோ அலையோ என அலைகிறார் அன்புமணி’ என ராமதாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்புமணியின் அத்தனை அவலத்துக்கும் அவருக்கு தலையணை மந்திரம் ஓதியவர்களே பொறுப்பு. கட்சியும் பாமகவின் சின்னமும் எங்களிடம்தான் உள்ளது. என பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

## காந்தி பெயர் நீக்கம் நாடு முழுவதும் போராட்டம்




100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் மகாத்மா காந்தி பெயர் நீக்கப்பட்டதைக் கண்டித்து நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்று வருகிறது. பெங்களூருவில் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே. சிவக்குமார் தலைமையில் போராட்டம் நடைபெறுகிறது. காந்தி பெயர் நீக்கத்தை கண்டித்து நேற்று நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர். 100 நாள் வேலைத்திட்டத்தின் புதிய மசோதாவுக்கு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். (ஐ)

## சிறந்த சர்வதேச படத்துக்கான ஆஸ்கர் விருது போட்டியில் இந்திய திரைப்படம் ஹோம் பவுண்ட் தேர்வு!



இந்தியாவின் சார்பில் ‘ஹோம்பவுண்ட் ’ என்ற ஹிந்தி திரைப்படம் அடுத்தாண்டு ஆஸ்கர் விருதுக்காக அதிகாரப்பூர்வமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சிறந்த சர்வதேச படத்துக்கான ஆஸ்கர் விருது போட்டியில் ‘ஹோம்பவுண்ட் ’ உள்பட 15 திரைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. 98வது ஆஸ்கர் விருதுக்கான போட்டிக்கு ஹோம்பவுண்ட் தேர்வாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

நீரஜ் கய்வான் இயக்கத்தில் இஷான் கட்டார், ஜான்வி கபூர், விஷால் ஜெத்வா உள்ளிட்டோர் நடித்துள்ள இப்படம் கடந்த செப்டம்பர் 26 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகியது. இந்தப் படம் திரையரங்குகளில் வெளியாவதற்கு முன்னதாக, உலகளவில் பல்வேறு திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டது. இந்த படம் இந்தாண்டு நடைபெற்ற கேன்ஸ் திரைப்பட விழாவில் அன் செர்டைன் ரிகார்ட் பிரிவில் திரையிடப்பட்டது. திரையிடப்பட்டபோது பார்வையாளர்கள் 7 நிமிடங்கள் எழுந்து நின்று வரவேற்பு அளித்தனர்.

சமீபத்தில் நடைபெற்ற டொராண்டோ சர்வதேச திரைப்பட விழா, சர்வதேச மக்கள் விருதுக்கான 2-வது இடத்தைப் பிடித்தது. கொரோனா காலத்தில் இந்தியாவில் புலம் பெயர் தொழிலாளர்கள் உள்பட பல்வேறு தரப்பினர் சந்தித்த பிரச்சனைகள் குறித்து நியூயார்க் டைம்ஸ் ’ல் வெளியான கட்டுரை அடிப்படையில் உருவான ஹோம்பவுண்ட் திரையரங்கு, ஓடிடியில் பெரும் வரவேற்பை பெற்றது. இந்தப் படத்தில் வட இந்தியாவில் ஒரு சிறிய கிராமத்தில் வாழும் சந்தன் குமார், முகமது சோஹைஃப் என்ற இரு இளைஞர்கள் சமூகத்தில் நிலவும் சாதி மற்றும் மத ரீதியிலான சிக்கல்களுக்கு மத்தியில், இருவரும் காவல் துறையில் வேலைக்கு சேர்வதற்கு அடுத்தகட்டத்துக்குச் செல்ல முயற்சிக்கின்றனர். மேலும், அடக்குமுறைக்கு எதிராக எவ்வாறு போராடுகிறார்கள் என்பதையும் படத்தில் காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆஸ்கர் விருதுக்கு இந்தியா சார்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஹிந்தி படமான ‘ஹோம்பவுண்ட்’ சிறந்த சர்வதேச திரைப்படப் பிரிவின் கீழ் நாமினேஷனுக்கான தகுதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டது. இறுதி நாமினேஷன் பட்டியல் ஜனவரி 22ம் தேதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆஸ்கர் விருது போட்டிக்கு ஹோம்பவுண்ட் திரைப்படம் தேர்வு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளித்திருப்பதாக தயாரிப்பாளர் கரண் ஜோகர் தெரிவித்துள்ளார். (ஐ)





# விரதம் இருப்பது நல்லதா? கெட்டதா?

சிவராத்திரி, ஏகாதசி போன்ற முக்கிய நாட்களில் பலரும் விரதமிருந்து கடவுளை வழிபடுவதுண்டு. இப்படி நாள் முழுக்க சாப்பிடாமல், இரவு முழுவதும் தூங்காமல் விரதம் இருப்பதால் உடலில் என்னென்ன மாற்றங்கள் உண்டாகும், யார் விரதம் இருப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று தெரிந்து கொள்ளலாம்.

விழாக் காலங்களில் பல மணி நேரங்கள் வரை சாப்பிடாமல் இருப்பது உடலில் என்ன மாதிரியான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று உணர்ந்து அதை சமாளிக்கும் திறன் இருந்தால் மட்டும் துணிந்து விரதம் இருப்பது நல்லது.

திடீரென ஒரு நாள் மட்டும் விரதத்தைத் தொடங்கி முடிப்பது உடலில் சில சமயங்களில் ஆற்றல் சமநிலையை உண்டாக்கும். அதனால் விரதம் இருக்கும் முக்கிய நாளுக்கு ஓரிரு நாட்களுக்கு முன்னதாக இருந்தே குறைவாகச் சாப்பிடப் பழகிக் கொள்ளுங்கள். பிறகு நீண்ட நேர விரதத்தைக் கடைபிடிக்கலாம்.

விரதம் இருப்பதற்கு இரண்டு நாளுக்கு முன்பிருந்து காரம் குறைவாக, பருப்பு போன்ற புரத உணவுகளை நன்கு குழைத்து எடுத்துக் கொள்வது நல்லது.

குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், வேறு ஏதேனும் உடல் சார்ந்த பிரச்சினைகளுக்கு தொடர்ந்து மருந்து சாப்பிடுகிறவர்கள் விரதங்கள் இருப்பதைத் தவிர்ப்பது நல்லது.

முழு உடல் ஆரோக்கியத்துடன் இருப்பவர்கள் மட்டுமே இதுபோன்ற பல மணி நேர, நாள் கணக்கிலான விரதங்களை இருக்க வேண்டும்.

நாள் முழுக்க உணவு எதுவும் எடுத்துக் கொள்ளாமல் பின் இரவு முழுவதும் விழித்திருப்பது உடலில் நிறைய ரசாசயன மாற்றங்களை ஏற்படுத்தும்.

அதனால் நாள் முழுக்க பட்டினி கிடக்கும் 24 மணி நேர டயட்டை தவிர்த்துவிட்டு, 16 மணி நேரத்திற்குள் விரதத்தை முடித்துக் கொள்வது நல்லது. அதனால் ஏற்படும் உடலியல் நன்மைகள் குறித்து இங்கே பார்க்கலாம்.

விரதம் இருக்கும்போது, நம்முடைய உடலில் உள்ள செல்கள் தங்களைப் புதுப்பித்துக் கொள்ள முயற்சி செய்யும்.

அப்படி புதிய செல்கள் உருவாகிற போது, உடலில் நோயெதிர்ப்பு சக்தி இயல்பாகவே அதிகரிக்க ஆரம்பிக்கும்.

விரதம் இருக்கும் நாட்களாக இருந்தாலும் கூட மனித உடலுக்கு,உடல் உறுப்புகள் முறையாகச் செயல்பட குறிப்பிட்ட அளவு கலோரிகள் தேவைப்படும். அவற்றை மட்டும் தவறாமல் எடுத்துக் கொண்டால், உடல் எடையைக் குறைக்க முடியும்.



விரத நாட்களில் அதிக கலோரிகள் இல்லாமல் உடலில் உள்ள கெட்ட கொழுப்புகளைக் குறைத்து உடலுக்குத் தேவையான எனர்ஜியாக மாற்றிக் கொள்ளும்.

ஆண்கள் குறைந்தபட்சம் 600 கலோரிகளும் பெண்கள் 500 கலோரிகளும் தவறாமல் எடுத்துக் கொள்வது நல்லது.

விரதம் இருப்பவர்கள் தங்களுடைய ரத்த சர்க்கரை அளவை முக்கியமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.






ஒரு நாள் முழுக்க உணவு இல்லாமல் விரதம் இருப்பது ரத்தத்தின் சர்க்கரை அளவை பாதிக்கும். அதனால் நீரிழிவு நோயாளிகள் விரதம் இருந்தால் மருத்துவ ஆலோசனையுடன் உணவுப் பரிந்துரையும் கேட்டு வாங்கிக் கொள்வது நல்லது.

நம்முடைய உடலில் ஏற்படும் பல்வேறு நோய்களுக்குக் காரணம் உடலில் உள்ள ரத்தம், நீர், உடல் உறுப்புகள் எல்லாவற்றிலும் உள்ள கழிவுகள் முறையாக வெளியேறாததே.

சரியான முறையில் விரதங்கள் மேற்கொள்ளும்போது அது நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம், பெருங்குடல் போன்றவற்றில் உள்ள அழுக்குகள் மற்றும் கழிவுகளை வெளியேற்றி உடலைச் சுத்தப்படுத்தும்..

இதற்கு அந்த உறுப்புகளின் வழக்கமாக வேலைகளில் இருந்து சிறிது ஓய்வு தேவைப்படும். அதனால் கழிவுகளை வெளியேற்ற விரதம் இருப்பது நல்லது. நம்முடைய உடலில் உள்ள வளர்சிதை மாற்ற நொதிகளின் செயல்பாட்டைச் சீராக்குவதன் மூலம் ஹார்மோன் செயல்பாடுகள் உடலில் முறையாக இருக்கும்.

இது பசியின்மை போன்ற பிரச்சினைகளைச் சரிசெய்து உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கச் செய்கிறது.

நம்முடைய உடலில் உள்ள கெட்ட கொழுப்புகளைக் குறைத்து நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்கச் செய்கிறது.

இதன் மூலம் நம்முடைய ரத்தக் குழாய்களில் தேவையற்ற கொழுப்பு படிவது தடுக்கப்பட்டு இதய ஆரோக்கியம் மேம்படுகிறது. மாரடைப்பு ஏற்படுவதைத் தடுக்கிறது.

இப்படி விரதம் இருப்பதன் மூலம் நம்முடைய உடலில் ஏராளமான நன்மைகள் உண்டாகின்றன.

# 5 ஆண்டுகள் பிரமாண்ட வளர்ச்சி: மஸ்கின் நிகர சொத்து மதிப்பு ரூ.58 லட்சம் கோடியாக உயர்வு



அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்கின் சொத்து மதிப்பு உலகத்திலேயே இதுவரை எந்த செல்வந்தருக்கும் அடைந்திராத உச்சத்தை எட்டியுள்ளது. அதிகபட்ச ஒரு நாள் தனிநபர் வருமானத்திலும் புதிய சாதனை படைத்துள்ளார் எலான் மஸ்க். ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா, ஏ.ஐ தொழில் நிறுவனங்களின் தலைவரான எலான் மஸ்க் உலக செல்வந்தர்களின் பட்டியலில் தொடர்ந்து முதல் இடம் வகித்து வருகிறார்.

இந்நிலையில் மஸ்கின் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் அடுத்த ஆண்டு ஐ.பி.யு எனப்படும் புது பங்கு வெளியீட்டிற்கு தயாராகி வருகிறது. ஸ்பேஸ் எக்ஸ் பங்கு வெளியீடு மூலம் சுமார் ரூ.63 லட்சம் கோடிக்கு மேல் நிதி திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவல்கள் நாளிதழ்களில் வெளியாவதை அடுத்து அதில் 42 விழுக்காடு பங்குகளை கொண்டுள்ள மஸ்கின் நிகர சொத்து மதிப்பு வரலாறு காணாத வகையில் 638 பில்லியன் டாலர்கள் அதாவது இந்திய மதிப்பீட்டில் சுமார் ரூ.58 லட்சம் கோடி அளவிற்கு பிரமாண்ட உச்சத்தினை அடைந்துள்ளது. 2020ம் ஆண்டு எலான் மஸ்க்கின் நிகர சொத்து மதிப்பு 8.20 லட்சம் கோடியாக இருந்த நிலையில் 5 ஆண்டுகளில் அவரது நிகர சொத்துமதிப்பு ரூ.48 லட்சம் கோடியாக விஸ்வரூப வளர்ச்சியை அடைந்துள்ளது. உலகத்திலேயே இந்த அசாத்திய இலக்கை அடைந்த முதல் நபர் எலான் மஸ்க் குறிப்பிடத்தக்கது.

இதே போல் அதிகபட்ச ஒரு நாள் தனிநபர் வருமானத்திலும் எலான் மஸ்க் ரூ.13 லட்சம் கோடியை ஈட்டி பிறர் எட்டமுடியாத உச்சத்தை அடைந்துள்ளார். மஸ்கின் ஒரு நாள் வருமான உயர்வு இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் நிகர சொத்து மதிப்பைவிட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ‘நேட்டோ’ கனவை கைவிடுகிறார் ஜெலன்ஸ்கி உக்ரைன் – ரஷ்யா போர் மேகம் விலகுகிறது:

## கிறிஸ்துமஸ் தினத்திற்குள் அமைதி ஒப்பந்தம் கையெழுத்து



உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வரும் உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்துவது தொடர்பாக ஜெர்மனியின் பெர்லின் நகரில் நேற்று மிக முக்கிய உச்சி மாநாடு நடைபெற்றது.

இதில் அமெரிக்க அதிபர் டிரம்ப், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி மற்றும் ஐரோப்பியத் தலைவர்கள் கலந்து கொண்டு நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினர். இக்கூட்டத்திற்குப் பிறகு பேசிய டிரம்ப், ‘உக்ரைன் அதிபர் மற்றும் ஐரோப்பியத் தலைவர்களுடன் மிகச் சிறந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. போர் நிறுத்த ஒப்பந்தம் முன்னெப்போதையும் விட தற்போது சாத்தியமாகியுள்ளது’ என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார்.


இந்த ஆலோசனையின் முக்கிய திருப்பமாக, நேட்டோ அமைப்பில் இணையும் தனது நீண்டகால கோரிக்கையை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி முதல் முறையாகக் கைவிடச் சம்மதம் தெரிவித்துள்ளார். இதற்குப் பதிலாக உக்ரைன் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அனைத்து நாடுகள் மீதான தாக்குதலாகக் கருதப்படும் என்ற நேட்டோவின் ‘பிரிவு 5’ போன்ற சட்டப்பூர்வமான பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்பட உள்ளது.

மேலும், அமைதியை நிலைநாட்ட ஐரோப்பியத் தலைமையிலான பன்னாட்டுப் படைகளை உக்ரைனில் நிறுத்தவும், 8 லட்சம் வீரர்களைக் கொண்ட ராணுவத்தைப் பராமரிக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. டான்பாஸ் பிராந்தியத்தைக் கைவிடுவது தொடர்பாகச் சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், வரும் கிறிஸ்துமஸ் தினத்திற்குள் இந்த அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)



# பிபிசி ரூ.91 ஆயிரம் கோடி நஷ்டஈடு வழங்க வேண்டும்: அதிபர் டிரம்ப் அவதூறு வழக்கு

லண்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பிபிசி நிறுவனம் கடந்த 2024ம் ஆண்டு அமெரிக்க தேர்தலுக்கு முன்பாக ஒரு மணி நேர ஆவண படத்தை ஒளிபரப்பியது. இது 2021ம் ஆண்டு டிரம்பின் உரையின் இரண்டு பகுதிகளில் இருந்து ஒரு மணி நேர இடைவெளியில் பேசப்பட்ட மூன்று மேற்கோள்களை ஒன்றாக இணைத்து வெளியிட்டு இருந்தது. இது தொடர்பாக பிபிசி நிறுவனம் கடந்த மாதம் அதிபர் டிரம்பிடம் மன்னிப்பு கேட்டு இருந்தது. மேலும் பிபிசியின் தலைமை நிர்வாக மற்றும் அதன் செய்திப்பிரிவு தலைவர் ஆகியோர் ராஜினாமா செய்தனர். இந்நிலையில் நேற்று பிபிசி நிறுவனத்தின் மீது அதிபர் டிரம்ப் வழக்கு தொடர்ந்துள்ளார். அதில், தன்னைப் பற்றி ஒரு தவறான, அவதூறான, ஏமாற்றும், இழிவுபடுத்தும், தூண்டிவிடும் மற்றும் தீங்கிழைக்கும் வகையில் உரையை சித்தரித்து ஒளிபரப்பி நியாயமற்ற வர்த்தக நடைமுறையில் ஈடுபட்டதாக பிபிசி நிறுவனம் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. பிபிசி நிறுவனம் ரூ.91 ஆயிரம் கோடி நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)



# நவம்பரில் இந்தியாவில் இருந்து ரூ.18,000 கோடி ஐபோன்கள் ஏற்றுமதி.!

கடந்த மாதம் இந்தியாவில் இருந்து ரூ.18,000 கோடி மதிப்பிலான ஐபோன்களை ஆப்பிள் நிறுவனம் ஏற்றுமதி செய்துள்ளது. 2025-26 நிதியாண்டில் 8 மாதங்களில் ரூ.1.25 லட்சம் கோடி மதிப்பிலான ஐபோன்கள் இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகியுள்ளன. நவம்பரில் இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஸ்மார்ட் போன்களில் 75% ஐபோன்களாகும். (ஐ)

# கணவரிடம் ரூ.100 கோடி கேட்கும் நடிகை செலினா ஜெட்லி



விவாகரத்து வழக்கில் இந்திய நடிகை ஒருவர் தனது கணவரிடம் இருந்து ரூ. 100 கோடி நஷ்டஈடு மற்றும் மாதம் ரூ. 10 லட்சம் ஜீவனாம்சம் வேண்டும் என கேட்டுள்ளார். மாடல் அழகியும் பிரபல நடிகையுமானவர் செலினா ஜெட்லி தான் இப்படி கேட்டிருக்கிறார். நடிகை செலினா ஜெட்லி ஆஸ்திரியா நாட்டை சேர்ந்த ஓட்டல் தொழிலதிபர் பீட்டர் ஹேக் என்பவரை கடந்த 15 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்துள்ளார்.

இந்த 15 வருட திருமண வாழ்க்கையில் அவர் தன்னை கொடுமைப்படுத்தியதாக செலினா ஜெட்லி, வழக்கு பதிவு செய்துள்ளார். அதில் தனக்கு ரூ. 100 கோடி நஷ்டஈடு மற்றும் மாதம் ரூ. 10 லட்சம் ஜீவனாம்சம் தரவேண்டும் என கேட்டுள்ளார். இந்த விவாகரத்து வழக்கை விசாரித்த நீதிமன்றம் இரண்டு தரப்பின் வருமான விவரங்களை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டு, ஜனவரி 27ம் தேதிக்கு அடுத்த விசாரணை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை எதிர்கொண்ட மிக மோசமான பேரழிவு குறித்து தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்த உப தலைவர் , பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நிவாரணம் வழங்க சீன அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நீண்டகால பொருளாதார, கலாச்சார மற்றும் இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த அனர்த்த சமயத்தில் இலங்கைக்கு வருகை தந்தமை தொடர்பில் உப தலைவர் உள்ளிட்ட தூதுக் குழுவினருக்கு ஜனாதிபதி அநுரகுமார நன்றி தெரிவித்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க சீனா இலங்கைக்கு வழங்கிய பொருள் மற்றும் நிதி உதவியையும் அவர் மனப்பூர்வமாக பாராட்டினார்.

குறிப்பாக சேதமடைந்த ரயில் கட்டமைப்பை மீளமைப்பதற்கும் புனரமைப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குமாறு ஜனாதிபதி ஜி ஜின்பிங் உள்ளிட்ட சீன அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை எதிர்கொண்ட அனர்த்த நிலைமை மற்றும் மறுசீரமைப்பு முன்னெடுப்புகள் குறித்து சீனப் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதே அரசாங்கத்தின் பிரதான பிரயத்தனமாக இருந்தாகவும் பின்னர் அவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து உணவு மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். அவர்களின் இயல்பு வாழ்க்கையை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்காக திட்டமிடப்பட்ட வகையில் பணியாற்றி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இரு நாள்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மு.ப. 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன், திடீர் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ரூ. 500 பில்லியனுக்கான குறைநிரப்பு மதிப்பீடு அன்றையதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

இதனைத் தொடர்ந்து மோசமான காலநிலையின் தாக்கத்தால் அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆளும் தரப்பினரால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு விவாதம் பி.ப 5.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

டிசம்பர் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவிருப்பதுடன், அன்றையதினம் ரூ. 500 பில்லியனுக்கான குறைநிரப்பு மதிப்பீடு விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படவுள்ளது.

## சுமண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த தேரர் தெரிவித்த இந்த வன்முறையான கருத்துக்கு எதிராக சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் உள்ள சட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் தொடர்ந்து ஆஜராகாத நிலையில் அவரைக் கைது செய்யுமாறு கடந்த 15 ஆம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்து வெளிநாட்டுப் பயணத் தடைவிதித்து மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து தேரருக்கு மட்டக்களப்புமேல் நீதிமன்றம் பிடிவிறாந்து வழங்கியதையடுத்து தேரர் இன்று 3 சிரேஷ்ட சட்டத்தரணிகளுடன் முன்நகர்வு பத்திரம் ஊடாக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ரி.ஜே. பிரபாகரன் முன்னிலையில் சரணடைந்ததையடுத்து நீதிபதி தேரரை ஒரு இலட்சம் ரூபா கொண்ட இருவர் கொண்ட சரீரப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

அதேவேளை, பௌத்த தேரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 50 பேர் கொண்ட பெரும் படையுடன் நீதிமன்றத்துக்கு இன்று அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. டித்வா சூறாவளி புயலால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த நாட்களில் வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், சர்வதேச முகவராண்மைகளின் இலங்கைப் பிரதானிகள் மற்றும் ஏராளமான அரச சாரா நிறுவனங்களின் இந்நாட்டுப் பிரதானிகள் எனப் பலரையும் சந்தித்து வருகின்றார்.

இத்தொடரின் மற்றுமொரு கட்டமாகவே இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ஃ பிராஞ்சை இன்று சஜித் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில், சமகால இலங்கையின் பல்வேறு சமூக மற்றும் பொருளாதார விவகாரங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். அனர்த்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள தற்போதைய பேரிடர் சூழ்நிலையால் நாட்டில் எழுந்துள்ள பன்முக பிரச்சினைகளை எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்சிடம் எடுத்துரைத்தார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையால் பெற்றுத் தர முடியுமான கூடிய ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் பெற்றுத் தருமாறும், இதுவரை காலமும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இந்நாட்டுக்கு நல்கிய ஆதரவுகளுக்கும் ஒத்துழைப்புகளுக்கும் உதவிகளுக்கும் 220 இலட்சம் மக்கள் சார்பாக நன்றியையும் மரியாதையையும் தெரிவித்துக்கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இங்கு மேலும் குறிப்பிட்டார்.

# சுற்றுச் சந்தி வழக்கு: நீதிமன்றம் அதிரடி

ஆண்டியர் சந்தியில் சட்டத்துக்கு முரணாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்டு வரும் சுற்றுச் சந்தி தொடர்பில் பிரதிவாதிகளுக்கு மன்றில் முன்னிலையாகுமாறு சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ஜே.பீ ஏ.ரஞ்சித் குமார் உத்தரவிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆண்டியர் சந்தியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டத்துக்கு முரணான சுற்றுச் சந்தி கட்டுமானத்திற்கு எதிராக சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல். மாஹிரினால் தொடரப்பட்ட வழக்கு செவ்வாய்க்கிழமை (16) அன்று சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் ஜே.பீ ஏ.ரஞ்சித் குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன் போது நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் படி 'அபிவிருத்தி பிரதேசமாக' வர்த்தமானியின் மூலம் பிரகடனம் செய்யப்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி வேலைகள் யாவும் குறித்த பிரதேசம் அமையப் பெற்றுள்ள உள்ளூராட்சி அதிகார சபையின் அனுமதியுடனேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

இந்நிலையில் மேற்படி சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆண்டியர் சந்தியில் சம்மாந்துறை பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் பல்வேறு தொழில் நுட்பக் குறைபாடுகளோடு வீதி அபிவிருத்தி அதிகார சபையானது சட்ட முரணாக மேற்கொண்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு கோரி தொடரப்பட்ட குறித்த வழக்கில், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், நிறைவேற்று பொறியியலாளர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரரான சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல். மாஹிர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி முபாறக் மு.அஸ்ஸமினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட சமர்பணத்தைக் கேட்டறிந்த மன்றானது எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆந் திகதி பிரதிவாதிகள் மன்றில் தோன்றுவதற்கான அறிவித்தலை அனுப்புமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட ஸ்டொக்கம் மக்கள் ஆர்ப்பாட்டம்



நோர்வூட் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மஹநெலு கிராம சேவகர் பிரிவின் ஹொரண பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சொந்தமான சாமிமலை ஸ்டொக்கம் தோட்டத்தில் கடுமையான மழை காரணமாக பாதிக்கப்பட்ட 65 குடும்பங்களைச் சேர்ந்த 300க்கும் அதிகமான மக்கள் பாரதி தமிழ் வித்தியாலயத்தில் கடந்த 12ம் திகதி தங்க வைக்கப்பட்டனர்.

கடந்த ஐந்து நாட்களாக முகாமில் தங்க தங்க வைக்கப்பட்ட மக்களுடைய வீடுகளை பரிசோதனை செய்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தால் (தேகூமு) அறிக்கை வெளியிடப்படும் என சொல்லப்பட்டதன் பின்னர் உடனடியாக அந்த மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு செவ்வாய்க்கிழமை (16) அறிவுறுத்தி இருந்தார்கள்.

தேசிய கட்டிட ஆராய்ச்சி சரியான முறையில் இடம் பெறவில்லை என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தோட்ட நிர்வாகம் குறைந்த பட்சம் நிலத்தையேனும் வழங்க வேண்டும் என கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# கிளிநொச்சியில் அதிபருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி மாசார் அ.த..க பாடசாலை அதிபர் த.ஜெபதாஸ் ? பாடசாலையில் செய்து வருகின்ற ஊழலுக்கு எதிராக பாடசாலை சமூகத்தால் புதன்கிழமை (17) அன்று காலை 7.30 மணியளவில் அமைதி வழியில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் படட்டது குறித்த ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை அதிபரின் முறையற்ற செயற்பாடுகள் மற்றும் பாடசாலை சமூகத்தினை புறக்கணித்து தன்னிச்சையாக முடிவெடுத்தல் மற்றும் பாடசாலை கணக்கறிக்கைகளின் முறைகேடு பாடசாலைக்கு மக்கள் செய்யும் நன்கொடைகளில் ஊழல் மற்றும் சொந்த பகமையை பயன்படுத்தி பாடசாலை மாணவர்களை புறக்கணித்தல் போன்ற காரணங்களை சுட்டிக்காட்டி குறித்த அமைதி வழி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது

குறித்த ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை சமூகம் அதிபருக்கு எதிரான பதாகைகளை ஏந்தி மிகவும் அமைதி வழியாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன் இன்னும் ஒரு மாத காலத்துக்குள் இதற்கான முடிவு கிடைக்கவில்லை என்றால் பாடசாலையினை முடக்கி ஆர்ப்பாட்டத்தை செய்வோம் என பாடசாலை சமூகத்தால் கூறப்பட்டதுடன்

இவ் முறைகேடுகள் தொடர்பாக பளை கோட்டக்கல்வி பணிமனை மற்றும் வலயம் மாகாண கல்வி திணைக்களம் போன்றவற்றிற்கு முறைப்பாட்டு கடிதங்கள் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பச்சிலைப்பள்ளி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்திலும் இது சம்பந்தமாகவும் எந்த விதமான தீர்வு கிடைக்கவில்லை என்றும் பாடசாலை சமூகம் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்

மற்றும் இந்த முறை கேடு செயற்பாடுகளில் தற்போது ஆளும் கட்சியின் பச்சிலைப்பள்ளி பிரமுகர்களுக்கும் தொடர்பு உள்ளது என்றும் அதனை உடனடியாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் கொண்டு அதற்கான உடனடி தீர்வு எடுக்க வேண்டும் என பாடசாலை சமூகத்தால் கூறப்பட்டதுடன்

இவ் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலை நலன் விரும்பிகள் என இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2025 வெளியிடப்பெற்றது.